# பகுதி—I [PART - I]

# அறிவுசார் சொத்துரிமை சட்டம்
## [INTELLECTUAL PROPERTY LAW]

## 1. அறிவுசார் சொத்துரிமையின் பண்புகள், வளர்ச்சி, முக்கியத்துவம், காலஅளவு மற்றும் அதன் மீறலுக்கு தீர்வழிகள்
## (CHARACTERISTICS, GROWTH, IMPORTANCE, TERM AND REMEDIES FOR INFRINGEMENT OF INTELLECTUAL PROPERTY)

**(மிகவும் முக்கியம்)**

**பாடச்சுருக்கம்: (SYNOPSIS)**

அ. முன்னுரை

ஆ. அறிவுசார் சொத்துரிமை

இ. அறிவுசார் சொத்துரிமையின் பண்புகள்/இயல்பு/அமைப்பு முறை

ஈ. அறிவுசார் சொத்துரிமையின் வளர்ச்சி / விரிவாக்கம்

உ. அறிவுசார் சொத்துரிமையின் முக்கியத்துவம்/நோக்கம்/ மற்றும் அதன் பாதுகாப்பிற்கான அவசியம்

ஊ. அறிவுசார் சொத்துரிமைகள்

எ. அறிவுசார் சொத்துரிமையின் பாதுகாப்புக்கான கால அளவு

ஏ. அறிவுசார் சொத்துரிமையைச் சுரண்டுதல் / மீறல் / தவறாகப் பயன்படுத்துதல் போன்றவற்றிற்கான தீர்வழிகள்

ஐ. நுகர்வோர் உரிமைகள் மற்றும் அறிவுசார் சொத்துரிமை

## அ. முன்னுரை:[INTRODUCTION]

சொத்து என்பதில் நபர் ஒருவருக்கு சொந்தமான அசையும் (உயிருள்ள) மற்றும் அசையாசப் (உயிரற்ற) பொருட்கள் ஆகியவை அடங்கும். இதில் சட்டபூர்வ உரிமைகளும் அடங்கும். மேலும் இதில் தனிநபர்களின் உரிமைகளான ஒருவரின் வாழ்க்கை, சுதந்திரம், மரியாதை, அந்தஸ்து, செல்வாக்கு போன்றவையும் அடங்கும்.

சுருங்கக் கூறினால் சொத்து என்பது சொத்தியல் (பருப்பொருளியல்) உரிமை எனப்பொருள்படும். உ.ம்: நிலம், தளவாடங்கள், அளிக்கும் உடைமை, சரக்குகள், பொருள்கள், கப்பல் சரக்கு, நிறுவனப்பங்குகள், கடன்கள், பதிப்புரிமைகள், காப்புரிமைகள் போன்ற அறிவுசார் சொத்துரிமைகள் ஆகியவற்றின் மீதான உரிமையைக் குறிக்கும்.

சொத்து என்பது இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறது.

**I.** தொட்டுணரத்தக்க சொத்து **II.** தொட்டுணர முடியாத சொத்து

### I. தொட்டுணரத்தக்க/கண்ணுக்குப் புலப்படக்கூடிய சொத்து: (Tangible Property)

தொட்டுணரத்தக்க சொத்து என்பது பருப்பொருள்கள் அல்லது கண்களால் காணவும், தொட்டு உணரவும் கூடிய பொருட்களுக்கான சொத்துரிமையைக் குறிக்கும்.

### II. தொட்டுணர முடியாத/கண்ணுக்குப் புலப்படாத சொத்து: (Intangible Property)

தொட்டுணரமுடியாத சொத்து என்பது பருப்பொருள்கள் அல்லாத இதர பொருட்களின் மீதான சொத்துரிமை ஆகும். தொட்டுணர முடியாத சொத்தை ஒருவர் பார்க்கவும் தொடவும் இயலாது. மேலும் அதில் மதிப்பு வாய்ந்த பருப்பொருள் அல்லாதவற்றில் உள்ள உரிமையும் அடங்கும். இதனைச் சட்டம் அங்கீகரித்து சிறப்பு பாதுகாப்பும் அளிக்கிறது. உ.ம்: வணிக முத்திரைகள், பதிப்புரிமைகள், வணிக நற்பெயர் போன்றவை.



## ஆ. அறிவுசார் சொத்துரிமை:(INTELLECTUAL PROPERTY)

அறிவார்ந்த சொத்து என்பது கண்ணுக்குப் புலப்படாத நுண் பொருளாகும். அதைப் பார்க்கவோ, தொடவோ இயலாது. இதனை உருவாக்கியவருடைய நோக்கத்தைச் சார்ந்த, உரிமைகளின் தொகுப்பை இது தன்னுள் கொண்டுள்ளது. மனிதனின் திறமை, அறிவு, உழைப்பு மற்றும் முயற்சியால் உருவாக்கப்பட்ட எது ஒன்றும் அறிவுசார் சொத்து எனப்படும்.

அறிவுசார் சொத்துரிமைச் சட்டமானது, ஒரு பொருளை உருவாக்கியவருக்கு அப்பொருள் மீதான சொத்தியல் உரிமையை அளிப்பதோடு, வேறு யாராவது அந்த உரிமைக்கு ஊறுவிளைவித்தால் அவர் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கவும் அதிகாரமளிக்கிறது.

எப்பொருளை யார் உருவாக்கி, நடைமுறைக்குக் கொண்டு வருகிறாரோ அவரே அதன் உரிமையாளர் என்ற நியாயத்தின் அடிப்படையில் தான் இச்சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. எனவே, இதன் முக்கிய நோக்கம், அறிவுசார் சொத்துக்களின் மீதான தனிநபர் உரிமையைப் பாதுகாப்பாகும்.

'அறிவுசார் சொத்து' என்ற சொல்லானது, பதிப்புரிமை, வணிகக் குறியீடு, காப்புரிமை, தொழில் வடிவமைப்புகள் /உருவங்கள்/ சின்னங்கள் மற்றும் இரகசியத் தகவல்கள் ஆகியவற்றின் மீதான சொத்துரிமையைக் குறிக்கும்.

## இ. அறிவுசார் சொத்துரிமையின் பண்புகள்/இயல்பு/ அமைப்புமுறை:(CHARACTERISTICS/ NATURE/SYSTEM OF INTELLECTUAL PROPERTY)

1. அறிவுசார் சொத்து சட்டத்தின் அடிப்படையான கருத்தே புதுமை மற்றும் அசல் தன்மையாகும்.
2. அறிவுசார் சொத்தானது ஒரு தொட்டுணர முடியாத மற்றும் நுண்ணிய சொத்தாகும்.

3. அதன் உரிமையாளரால் உருவாக்கப்பட்ட அல்லது கண்டுபிடிக்கப்பட்ட முக்கிய பொருளிற்கு தொடர்புடைய உரிமைகளின் தொகுப்பு ஆகும்.

4. அறிவுசார் சொத்துரிமைகளின் மூலம் சொத்தினை ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு தானே உபயோகித்துக் கொள்வதற்கான நெறிதழுவிய உரிமை உரிமையாளருக்கு உண்டு. சொத்தின் மீது அவருக்குள்ள உரிமைகளின் மீறுகைக்கு எதிராக அவர் நடவடிக்கை எடுக்க முடியும். அவர் தனது உரிமைகளை மாற்ற முடியும், அதற்கு உரிமங்கள் வழங்க முடியும், மூன்றாம் தரப்பினருக்கு உரிமைகளை விற்க முடியும். இதற்கு அறிவுசார் சொத்து அதிகாரியிடம் பதிவு செய்ய வேண்டும்.

5. அறிவுசார் சொத்து, உரிமைகள் மற்றும் கடமைகளை உருவாக்குகிறது. ஒரு நபர் தான் உருவாக்கும் செயல், அல்லது தனது நற்சிந்தனைக்கு ஓர் வடிவம் கொடுக்கும்போது உபயோகத்தை முறைப்படுத்துவதற்கு அவருக்கு அறநெறி மற்றும் சட்டபூர்வ உரிமை கொடுப்பதே அறிவுசார் உரிமையின் நோக்கமாகும். மேலும் மற்றவர்கள் அதைச்சுரண்டி நியாயமற்ற முறையில் பயன்படுத்துவதைத் தடுக்கும் வகையில் அவர்நிலை இருக்க வேண்டும் என்பதும் அறிவுசார் சொத்தின் நோக்கமாகும்.

6. உரிமைமாற்றம் அல்லது மாற்றிக் கொடுத்தல் மூலமாக அறிவுசார் சொத்தை ஒருவர் அடையலாம்.

7. தனிப்பட்ட நபருக்கான உரிமைகளுக்கு காலவரையறை முடிந்து விட்டால் அது பொதுச் சொத்தாகி விடும். அப்போது யார் வேண்டுமானாலும் அதை உபயோகிக்க முடியும்.

8. இந்தச் சொத்து காப்புரிமை, தொழில்சார் வடிவமைப்புகள்/ உருவங்கள், பதிப்புரிமை, வணிகக் குறியீடுகள், தொழில்நுட்பம், மற்றும் இரகசியத் தகவல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.



9. தெளிவாகக் கூறினால், காப்புரிமை, வடிவமைப்புகள், மற்றும் வணிகக் குறியீடுகள் ஆகியன ‘தொழில்சார் சொத்து’ என்றும், பதிப்புரிமை மற்றும் ரகசியத் தகவல் போன்றவை ‘அறிவுசார் சொத்து’ என்றும் வழங்கப்படுகிறது.

இருப்பினும், வணிகக் குறியீடு தவிர, காப்புரிமை, வடிவமைப்புகள் தொழில்சார்ந்த உருவங்கள் மற்றும் பதிப்புரிமை ஆகியவை அறிவுசார்ந்த முயற்சியின் விளைவாக உருவாக்கப்பட்டவை ஆகும்.

10. மேற்கூறிய அனைத்து சொத்துக்கள் சார்ந்த உரிமைகளில் பல ஒற்றுமைகள் உள்ளதால், ஒட்டு மொத்தமாக இவற்றை அறிவுசார் சொத்துக்கள் என்று அழைக்கப்படுகின்றன.

11. இந்த அறிவுசார் சொத்தினை சட்டப்படி அதற்குரிய அதிகாரியிடம் பதிவு செய்தால் மட்டுமே கண்டுபிடித்தவர், நூலாசிரியர், அல்லது புதிதாக உருவாக்கியவர் போன்றோருக்கு அதன் மீதான உரிமைகள் குறிப்பிட்ட காலத்திற்குக் கிடைக்கும்.

12. அறிவுசார் சொத்துக்களை உரிமைமாற்றம் மற்றும் மாற்றிக் கொடுத்தல் மூலமாகப் பெறமுடியும். உரிமை மாற்றம் என்பது அறிவுசார் சொத்துக்கான உரிமம் வழங்குதல் அல்லது அறிவுசார் சொத்து உரிமையை மற்றவருக்கு மாற்றிவிடுதல் ஆகியவற்றைக் குறிக்கும். நிதி நொடிப்பு நிலை மற்றும் வாரிசுரிமை சார்ந்த சட்டங்களின் மூலமாக அறிவுசார் சொத்துரிமையை ஒருவர் மற்றவருக்கு மாற்றிக் கொடுக்கலாம்.

13. இந்தச் சட்டத்தின் செயல்பாடு எல்லைக்கு உட்பட்டதாகும். இந்த உள்நாட்டு உரிமைச் சட்டங்கள், குறிப்பிட்ட காலத்திற்கு, வேறு எந்தவித போட்டியின்றி உரிமையாளர் மட்டுமே அதை முற்றிலுமாகப் பயன்படுத்தி அனுபவிக்கும் உரிமையை அவருக்கு அளிக்கிறது.

14. அறிவுசார் சொத்துரிமைகள், சட்டமுறை உரிமைகள் ஆகும். இவை காப்புரிமை சட்டம் 1999, வணிகக்குறிகள் சட்டம் 1999, வடிவமைப்புச் சட்டம் 2000, திருத்தப்பட்ட காப்புரிமைகள் சட்டம் 2002 [Semi conductor integrated circuits Layout Design Act 2000] சரக்குகளின் பூகோள குறியீடுகள் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 1999, செடிவகைகள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகளின் உரிமைகளுக்கான மசோதா 1999 மற்றும் தகவல் தொழில்நுட்ப சட்டம் 2000ன் மூலம் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## ஈ. அறிவுசார் சொத்துரிமையின் வளர்ச்சி/விரிவாக்கம்: [GROWTH/EXPANSION OF INTELLECTUAL PROPERTY]

1. அறிவுசார் சொத்தின் பரப்பெல்லை விரிவடைந்து கொண்டே செல்கிறது. இந்த அறிவுசார் சொத்துகுறித்த இந்தியச் சட்டங்கள், வணிகம் மற்றும் வரிகள் மீதான பொது உடன்படிக்கை (GATT) மற்றும் வர்த்தகத்துடன் தொடர்புடைய அறிவுசார் சொத்துரிமை (TRIPS) ஆகிய பன்னாட்டு உடன்படிக்கைகள் மற்றும் உயிரியல் பன்மீயச் சட்டம் 2002 போன்றவற்றுடன் இயைந்து செல்வதற்காகப் பல்வேறு மாறுதல்களுக்கு உள்ளாகியது.

2. உலகமயமாக்கலின் விளைவாக தகவல் தொடர்பு மற்றும் போக்குவரத்துத் துறைகள் வளர்ச்சி பெற்றுள்ளன. இவ்வளர்ச்சி அறிவுசார் சொத்துதாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

3. இந்த அறிவுசார் சொத்துகளின் சர்வதேசப் பண்பை பல்வேறு பன்னாட்டு உடன்படிக்கைகளும் அங்கீகரித்துள்ளன. (பெர்ன் பதிப்புரிமை உடன்படிக்கை போன்றவை)

4. செடி வகைகள், வெளிநாட்டவர் உரிமை, தகவல் தொழில்நுட்பம், கணினித் தகவல் பரப்பு விதிமுறைகள் ஆகியன



அறிவுசார் சொத்துக்களை பாதுகாக்க பல புதிய சட்டங்கள் இயற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

## உ. அறிவு சார் சொத்துரிமையின் முக்கியத்துவம்/நோக்கம்/நன்மைகள் பாதுகாப்பிற்கான தேவை: [IMPORTANCE/PURPOSE/NEED AND BENEFITS FOR PROTECTION OF INTELLECTUAL PROPERTY]

1. அறிவுசார் சொத்துக்களின் பங்களிப்பு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவியுள்ளது.

2. தாவர வகைகளைப் பாதுகாத்தல், பல வகையான நியாயமற்ற போட்டிகளைத் தடுத்தல், நற்பெயரைத் தவறாகப் பயன்படுத்துதலைத் தடுத்தல், வர்த்தக மதிப்பு அல்லது பெருமையைப் பாதுகாத்தல் போன்றவைகள் உலக வர்த்தகம் மற்றும் தொழில்துறைகளில் முக்கியமானவைகயாக உள்ளன.

3. ஆக, கண்டுபிடிப்பாளர்கள், நூலாசிரியர்கள் மற்றும் படைப்பாளி ஆகியோரின் அறிவுசார்ந்த கடின உழைப்பு நாடுகளின் செல்வ வளத்திற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உதவி வருகின்றன. அதனால் தான் அதன் முழுப்பலனையும், அந்த கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் நூலாசிரியர்கள் மட்டுமே அனுபவிக்க வேண்டும் என்பதால் அவர்களின் அறிவுசார் சொத்துரிமையைப் பாதுகாக்கும் தத்துவம் இன்று வளர்ந்துள்ளது எனலாம்.

4. கண்டுபிடிப்பாளர் ஒருவருக்கு காப்புரிமை வழங்குவதன் மூலம் போட்டியாளர்கள் புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் கட்டாயத்திற்கு ஆளாவதால் செய்முறை, உற்பத்தி பொருட்கள் மற்றும் இயந்திரங்களின் தரம் முன்னேற்றம் அடைகிறது.

5. காப்புரிமைகள் பெறுவதற்காக ஒருவர் கண்டுபிடிப்பு விவரங்களை தெரிவிக்க வேண்டும். இவரிடமிருந்து காப்புரிமை அதிகாரி புதிய தொழில்நுட்பத்தின் விவரங்களைப் பெற்றுப் பாதுகாக்கிறார். இந்த நடைமுறையால் கண்டுபிடிப்பாளரின் இறப்பிற்கு பிறகும் கூட அவரது கண்டுபிடிப்பு பற்றி விவரக்குறிப்புகள் பொதுமக்களுக்குக் கிடைக்கும் வகையில் பாதுகாப்பாக வைக்கப்படுகிறது.

6. தொழில்சார் வடிவமைப்புகள் மற்றும் கண்டுபிடிப்புகளைப் பாதுகாப்பதால் அதன் உரிமையாளருக்கு மேலும் புதிய பல வடிவமைப்புகளையும், பொருட்களையும் கண்டுபிடிக்கும் ஊக்கம் உண்டாகிறது. ஏனெனில் இந்தக் காப்புரிமையை இவர் வியாபார நோக்கில் பயன்படுத்தி பலன் பெறலாம்.

7. அறிவுசார் சொத்துரிமைகள், நன்கு அறியப்பட்ட வணிகக்குறியீடுகள், கண்டுபிடிப்புகள் போன்றவற்றிற்கு போலிகள் உருவாவதைத் தடுக்கிறது. போலிகளும் தரம் குறைந்த பொருட்களும் சந்தையில் விற்பனைக்கு வருவதை அறிவுசார் சொத்துரிமை தடுக்கிறது.

8. திரைப்படம், தொலைக்காட்சி, வானொலி போன்ற பொழுது போக்கு அம்சங்கள், தாங்கள் அந்தத் துறையில் இருப்பதற்கும், நிலைத்து நிற்பதற்கும் பதிப்புரிமையையே சார்ந்துள்ளது.

**ஊ. அறிவுசார் சொத்துரிமைகள்:**

**[INTELLECTUAL PROPERTY RIGHTS]**

உலகளாவிய அறிவுசார் சொத்து அமைப்பினை நிறுவியிருக்கும் பன்னாட்டு ஒப்பந்தத்தின் சட்டப்பிரிவு 2(vii) ன் விளக்கம் வருமாறு:

அறிவுசார் சொத்துரிமைகள், பின்வருபவை தொடர்பான உரிமைகளை உள்ளடக்கியுள்ளது:



— கல்வி, கலை மற்றும் அறிவியல் பணிகள்

— கலைஞர்களின் நிகழ் கலைவடிவங்கள், ஒலிப்பதிவுகள் மற்றும் ஒலிபரப்புகள்

— மனித முயற்சியில் அனைத்து துறைகளிலும் உள்ள கண்டுபிடிப்புகள்

— அறிவியல் கண்டுபிடிப்புகள்

— தொழில்துறை வடிவமைப்பு

— வணிக குறியீடுகள், சேவை குறிகள், வணிக பெயர்கள் மற்றும் பணிநிலைகள்

— நியாயமற்ற போட்டிக்கு எதிராக பாதுகாப்பு வழங்குதல்.

மற்றும் தொழிற்சாலை, அறிவியல், இலக்கியம், கலை தொடர்பான துறைகளில் உள்ள அறிவுசார் நடவடிக்கையிலிருந்து வரும் அனைத்து உரிமைகளையும் உள்ளடக்கியுள்ளது.

**பல்வேறு வகையான அறிவுசார் சொத்துரிமைகள்: (நியாயமற்ற போட்டிக்கு எதிரான பாதுகாப்பு)**

**[Kinds of Intellectual Property Rights (Protection against unfair competition)]**

பதிப்புரிமை, காப்புரிமை, தொழில் வடிவமைப்புகளுக்கு உரிமை, வணிககுறியீடுகளுக்கு உரிமை போன்றவை அறிவுசார் சொத்துரிமைகளின் முக்கிய வகைகளாகும். இந்த அனைத்து இனங்களிலும் நியாயமற்ற போட்டி ஏற்படாமல் இருக்க அறிவுசார் சொத்து உரிமைகளை தன்னகத்தே கொண்டிருப்பவருக்கு பாதுகாப்பு வழங்கப்படுகிறது.

**i. பதிப்புரிமை: [COPYRIGHT]**

பதிப்புரிமை என்றால் இதைக் கொண்டுள்ள நூலாசிரியர்கள் தங்களது படைப்பை நகலெடுக்க அல்லது மீண்டும் பதிப்பிக்கக் கிடைக்கும் முழு உரிமை ஆகும். இலக்கியம், நாடகம், இசை, கலைப்பணிகள், திரைப்படம் மற்றும் ஒலிப்பதிவு போன்றவைகளில் சிலவற்றைச் செய்வதற்கு அல்லது மற்றவர்கள் செய்வதற்கு அவர்களுக்கு அங்கீகாரம் வழங்குவதற்கான உரிமையே பதிப்புரிமை எனப்படும்.

பதிப்புரிமை என்பது ஒரு மனிதன் தனது அறிவுக் கூர்மையினாலும், திறமையினாலும் உருவாக்கிய மூலக்கலைப் படைப்பின் உரிமையைப் பாதுகாப்பதாகும். பதிப்புரிமைகள் தொடர்பான விதிகள் பதிப்புரிமை சட்டத்தின் 1957ன்கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**ii. புதுப்புனைவு /காப்புரிமை: [PATENT RIGHT]**

காப்புரிமை பெறுபவர்க்கு காப்புரிமை பெற்ற தனது கண்டுபிடிப்பைத் தானே உபயோகிப்பதற்கும், மற்றவர்கள் உபயோகிக்க உரிமங்கள் வழங்குவதற்கும், அந்த உரிமையை மூன்றாவது நபருக்கு விற்பதற்கும் முழு உரிமை உண்டு.

ஒரு கண்டுபிடிப்பு என்பது புதிய பொருளாகவோ அல்லது ஏற்கனவே இருக்கும் பொருளை புதிய செய்முறையில் தயாரிப்பதாகவோ மற்றும் ஏற்கனவே உள்ள அதன் தயாரிப்பின் மேம்பட்ட அமைப்பாகவோ இருக்கலாம். காப்புரிமைகள் தொடர்பான விதிகள் காப்புரிமை சட்டம் 1970னால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

**iii. தொழிற்சார்ந்த வடிவமைப்புகளுக்கான உரிமை: [RIGHT TO INDUSTRIAL DESIGNS]**

இந்த உரிமை புதிய வடிவமைப்பைப் பயன்படுத்தி அதன் பலன்களை அனுபவிக்க அதனை உருவாக்கிய நபருக்கான தனிப்பட்ட முழு உரிமை ஆகும்.



இந்த வடிவமைப்பை மற்றவர்கள் பயன்படுத்த வேண்டி இவர் மூன்றாம் தரப்பினருக்கு உரிமம் வழங்க முடியும் அல்லது உரிமைகளை மூன்றாம் தரப்பினருக்கு ‘தொழில் சார்ந்த’ உரிமையாக மாற்றித் தரவும் முடியும். வடிவமைப்புகளின் உரிமைகள் தொடர்பான விதிகள் வடிவமைப்புச் சட்டம் 2000ன்கீழ் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**iv. வணிகக் குறியீட்டு உரிமை:(வணிக முத்திரைச் சட்டம் [RIGHT TO TRADE MARK]**

வணிகக்குறியீட்டைப் பதிவு செய்வதன் மூலம் அதன் உரிமையாளர் அதை மற்றவர்கள் உபயோகிப்பதை தடுக்கும் உரிமையைப் பெறுகிறார், அல்லது அதே போன்று போலியான ஒரு வணிகக் குறியீட்டைப் பதிவு செய்வதைத் தடுக்கும் உரிமையையும் பெறுகிறார். வணிகக்குறியீடு தொடர்பான விதிகள் வணிகக் குறியீடுகள் சட்டம் 1999னால் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

**v. ஒருங்கிணைந்த சுற்றிணைவுகளின் மனைவரைபட உருவங்கள் :**

**[Layout Design of Integrated circuits]**

மனைவரைபட உருவம் என்றால் உற்பத்திக்கென தயாரிக்க எண்ணியுள்ள ஒருங்கிணைந்த சுற்றிணைவிற்கென தயாரிக்கப்பட்ட மும்முனை அளிப்பீடு ஆகும்.

ஒருங்கிணைந்த சுற்றிணைவு என்றால் ஒருங்கிணைந்து மின்னணு செயல்பாட்டில் ஈடுபடுத்தும் நோக்கோடு உருவாக்கப்பட்ட பொருள் ஆகும். ஒருங்கிணைந்த சுற்றிணைவுகளின் மனைவரைபட உருவங்களில் மனைவரைபட உருவத்தினை பதிவு செய்ய விண்ணப்பிப்பதற்கு உருவ அமைப்பாளருக்கு தனிப்பட்ட உரிமை உண்டு மற்றும் மூன்றாம் தரப்பினர் அதை உபயோகிப்பதற்கு உரிமம் வழங்க முடியும் அல்லது எந்த நபருக்கும் உரிமைமாற்றம் செய்ய முடியும்.

### vi. இரகசிய தகவலுக்கான உரிமை: [Right to confidential Information]

இரகசியத்தகவல் மற்றும் தொழில்நுட்பம் போன்றவற்றை இரகசியமாக வைப்பதற்கும் அவற்றைப் பாதுகாக்கவும் அவருக்கு உள்ள உரிமையே இரகசியத் தகவலுக்கான உரிமையாகும். நம்பிக்கை அல்லது ஒப்பந்த மீறுதலுக்கான நடவடிக்கை மூலம் மற்றவர்கள் அத்தகைய தகவலை சட்டமுரணாக உபயோகிப்பதற்கு எதிராக அவர் நடவடிக்கை எடுக்க முடியும்.

### எ. அறிவுசார் சொத்துரிமையின் பாதுகாப்பிற்கான காலஅளவு: [TERM OF PROTECTION OF INTELLECTUAL PROPERTY]

பின்வருபவை அறிவுசார் சொத்தின் பாதுகாப்பிற்கான காலஅளவு ஆகும்.

### 1. பதிப்புரிமை: [Copyright]

இலக்கியம் அல்லது கலைப்படைப்புகள், நாடகப்படைப்புகள், நிகழ்கலை உரிமைகள் —நூலாசிரியர்/ நிகழ்கலைஞரின் ஆயுட்காலத்தோடு மேலும் 50 வருடங்களுக்கு பாதுகாக்கப்படுகிறது.

### 2. காப்புரிமை/ புதுப்புனைவு: [Patent right]

முந்துரிமை தேதியிலிருந்து (காப்புரிமை பதிவு செய்யப்பட்ட பிறகு முந்துரிமை தேதி நிர்ணயிக்கப்படுகிறது) அதிகபட்சமாக 20 வருடங்கள் வரை பாதுகாக்கப்படுகிறது.

### 3. வணிகக்குறியீடுகள் / வணிகமுத்திரை: [Trade Marks]

i. வணிகக்குறியீட்டினைப் பதிவு செய்தது முதல் 10 வருடங்களுக்கு அந்த முத்திரை செல்லுபடியாகும். அதன்பின்பு அவ்வப்போது புதுப்பிக்கப்படலாம்.



ii. வரையறுக்கப்பட்ட கட்டணத்தை வழங்கி ஏற்கனவே செய்யப்பட்ட பதிவு முடியும் தேதியிலிருந்து மேலும் 10 வருட காலத்திற்கு வணிக முத்திரையைப் புதுப்பிக்கலாம்.

### 4. தொழில் சார்ந்த வடிவமைப்புச் சட்டம்: [Designs Act]

தொழில்சார் வடிவமைப்பை உருவாக்கியவர் பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து 10 வருடங்களுக்கு அதற்கான உரிமையைக் கொண்டிருக்க முடியும். தகுந்த காலத்தில் புதுப்பிக்கப்பட்டிருந்தால் மேலும் 5 வருடங்களுக்கு பதிப்புரிமை உண்டு.

### ஏ. அறிவுசார் சொத்துரிமையைச் சுரண்டுதல் /மீறுகை/ தவறான பயன்பாடு போன்றவற்றிற்கான தீர்வுகள்: [REMEDIES/ EXPLOITATION/ INFRINGEMENT/ ABUSE OF INTELLECTUAL PROPERTY]

1. அறிவுசார் சொத்தினை சுரண்டுதல்/ தவறாக பயன்படுத்துதல்/ மீறல் என்றால் அறிவுசார் சொத்தை வணிக நோக்கில் சுரண்டுவதற்கு வழிவகுக்கும் வகையில் இதர நபர்/ நபர்களின் அங்கீகாரமற்ற உபயோகம் ஆகும். சிலசமயங்களில், பொருளுக்கு அதிகவிலை வசூலிப்பதன்மூலம் அறிவுசார் சொத்தின் உரிமையாளர் கூட வணிகநோக்கில் சுரண்ட முடியும். (மற்றவர்களுக்கு கட்டாய உரிமங்கள் வழங்குவதின் மூலம் இது தடுக்கப்படுகிறது).

2. மற்றவர்களால் அறிவுசார் சொத்து வணிகமுறையில் பயன்படுத்தப்படுவது சட்டமுரணானது என்பதால், பாதிக்கப்பட்ட நபருக்கு பல்வேறு இயற்றப்பட்ட சட்டமுறைகளின் கீழ் சட்டப்பூர்வமான நிவாரணங்கள்/தீர்வுகள் உண்டு.

3. அறிவுசார் சொத்துரிமை மீறப்பட்டால், அந்த உரிமையை நிலைநாட்ட மாவட்ட அல்லது உயர்நீதிமன்றங்களில் வழக்குத் தொடரலாம். வணிகக் குறியீடு மற்றும் பதிப்புரிமை மீறலுக்கு குற்றவியல் வழக்கும் தொடுக்க முடியும்.

4. அறிவுசார் சொத்துரிமை மீறலுக்கு உறுத்துக்கட்டளை பெறுதல், இழப்பீடு கோருதல், லாபக்கணக்கீடு வேண்டல், நீக்குவதற்காக அல்லது அழிப்பதற்காக அவற்றை மீண்டும் கொணரச் செய்தல் போன்ற உரிமையியல் தீர்வுகளும் உள்ளன.

5. அறிவுசார் சொத்துரிமை மீறலுக்கு குற்றவியல் தீர்வாக சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் வழங்கப்படும்.

6. அறிவுசார் சொத்துக்கள் களவு போவது (திருடுவது/ கொள்ளையடிப்பது) என்பது இன்று உலகளாவியப் பிரச்சினையாக இருப்பதால், இதற்கு உரிமையியல் தீர்வுகளும் குற்றவியல் தண்டனைகளும் தீர்வுகளாக உள்ளன.

**ஐ. நுகர்வோர் உரிமைகள் மற்றும் அறிவுசார் சொத்துரிமை: [CONSUMER RIGHTS AND INTELLECTUAL PROPERTY]**

நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் (திருத்தப்பட்ட) சட்டம் 2002ன்படி பின்வருபவை நுகர்வோரின் உரிமைகள் ஆகும்.

அ. உயிர் மற்றும் சொத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பொருட்களை விற்பனை செய்வதற்கு எதிராக பாதுகாக்கப்பட வேண்டிய உரிமை.

ஆ. நேர்மையற்ற வியாபார நடவடிக்கைகளுக்கு எதிராக நுகர்வோரை பாதுகாப்பதற்கு அவரிடம் பொருட்களின் அளவு, விலை, தரம், சுத்தம், திறன், குறித்து தெரிவிக்கப்பட வேண்டிய உரிமை.

இ. இயன்ற இடத்தில் எல்லாம் சரியான விலையில் பொருட்களை அணுகுவதற்கு உறுதி செய்யப்பட வேண்டிய உரிமை.

ஈ. தகுந்த ஆயங்களில்/மன்றங்களில் நுகர்வோர்களின் நலன்களுக்கு உரிய கவனம் அளிக்கப்பட, அவை கேட்கப்படுவதற்கும், உறுதி செய்யப்படுவதற்குமான உரிமை.



உ. நேர்மையற்ற வணிக நடைமுறைகளுக்கு எதிராக அல்லது நேர்மையற்ற வகையில் நுகர்வோர்களை சுரண்டுவதற்கு எதிராக குறை நீக்கம் பெறுவதற்கான உரிமை.

ஊ. நுகர்வோர் கல்விக்கான உரிமை.

**மாதிரி வினாக்கள்**

1. அறிவுசார் சொத்துரிமை என்பதை விளக்குக. அதன் பண்புகள் யாவை?
2. அறிவுசார் சொத்துரிமை என்பதன் முக்கியத்துவம் என்ன? அறிவுசார் சொத்துரிமை என்பதின்கீழ் எவையெல்லாம் சேர்க்கப்பட்டுள்ளன?
3. அறிவுசார் சொத்துரிமை என்பது விரிவடையும் இயல்பை உடையது– இக்கருத்தை எடுத்துக்காட்டு தந்து விளக்குக.
4. அறிவுசார் சொத்துரிமை பல வழிகளில் சுரண்டக் கூடிய மதிப்பு மிக்க சொத்திருப்பு. ஆராய்க?
5. அறிவுசார் சொத்துரிமை என்றால் என்ன? அதன் அமைப்பு முறையை விளக்குக?
6. சிறுகுறிப்பு வரைக.

அ. அறிவுசார் சொத்துரிமை் பண்புகள்

ஆ. அறிவுசார் சொத்துரிமை என்பதன் முக்கியத்துவம்

இ. அறிவுசார் சொத்துரிமைகள்

ஈ. அறிவுசார் சொத்துரிமையினை பாதுகாப்பதற்கான தேவை.